

# JAFFNA EDUCATION
## YouTube channel

1

## தரம் - 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப்பரீட்சை - 2022

வினாத்தாள் I

சுட்டெண் :-.............................................

ஒரு மணித்தியாலம்

ஆசிரியர் -
P.A.சசிகுமார் -B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass.Dip.in.Primary(Merid). SLEAS

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்





| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன். | .............................. பெயர்<br>.............................. ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .............................. பெயர்<br>.............................. ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர்<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .............................. பெயர்<br>.............................. ஒப்பம் |
| பெற்றோர் | |
| ஆசிரியர் | |

JAFFNA EDUCATION YOUTUBE

- **கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து 1, 2 ஆகிய வினாக்களுக்கு விடை தருக**

01. முதலில் தரப்பட்ட சித்திரத்துடன் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரம் எது?


   

(1) (2) (3)

02. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்யவேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?



உரு A





உரு B

(1) 4 (2) 5 (3) 6

- **03, 04 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?**


03.



(1) (2) (3)

04.



(1) (2) (3)

- **05, 06 ஆகிய வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

05. இருவர் ஏறிச்சென்றிடலாம், விரும்பும் இடங்கள் போய் வரலாம், களைப்பும் சலிப்பும் தருவதில்லை. இங்கு குறிப்பிடப்படுவது.

(1) (2) (3)

JAFFNA EDUCATION YOUTUBE

06. 
தரப்பட்டுள்ள படத்திற்குப் பொருத்தமாக அமைவது.

(1) இயற்கை, உணவு, மழை

(2) நிழல், இயற்கை, ஒருவித்திலை

(3) இயற்கை, வெளிச்சம், கனி

07. **தரப்பட்டுள்ள கலந்துரையாடலை பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.**

A - பாடசாலைக்கு எப்படிப் போவது? நனைந்து போவேன்.

B - இன்று மழை பெய்யுமா? வானம் இருண்டிருக்கின்றது.

C - குடையை எடுத்துச் செல்ல மறக்க வேண்டாம்.

D - வானிலை அறிக்கையில் மழை பெய்யும் என்றார்களே!

(1) ABCD (2) BDCA (3) BDAC


08. காந்தனிடம் ஒரே அளவான 24 கம்பித் துண்டுகள் உள்ளன. அக் கம்பித் துண்டுகளினால் சதுரமுகி ஒன்றையும், நான்முகி ஒன்றையும் அமைத்தால் எஞ்சியுள்ள கம்பித் துண்டுகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

09. பிரணவனின் தம்பி அருணன். பிரணவனுக்கு இப்பொழுது 20 வயது. அருணன் தனது 10ஆவது பிறந்த நாளை ஐந்து வருடங்களிற்கு முன் கொண்டாடினான். பிரணவன் தனது 10ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய பொழுது அருணனின் வயது யாது?

(1) 15 (2) 7 (3) 5

10. சதுர வடிவான கட்டவலையொன்றைப் பெறுவதற்கு ஒன்றுடன் ஒன்று சேர்க்க வேண்டிய இரண்டு உருக்களைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.



A B C D

(1) Aயும் Cயும் (2) Aயும் Dயும் (3) Bயும் Dயும்

11. 


அருகே தரப்பட்டுள்ள செவ்வக வடிவிலான இறப்பர் நாடா A,B,C,D ஆகிய முனைகளில் இருவர் இழுத்ததன் காரணமாக இரண்டு மடங்காக இழுபட்டுள்ளது. எனின், ஆரம்பத்தில் இருந்த நாடாவின் சுற்றிவரவுள்ள நீளம் எவ்வளவு?

(1) 12.5cm (2) 25 cm (3) 30 cm

JAFFNA EDUCATION YOUTUBE

12. பேணியொன்றில் 10 பச்சை நிற இனிப்புக்களும். 5 மஞ்சள் நிற இனிப்புக்களும், 2 சிவப்பு நிற இனிப்புக்களும், 15 பச்சை நிறமல்லாத இனிப்புக்களும் காணப்பட்டன. எனின், பேணியில் உள்ள இனிப்புக்களின் எண்ணிக்கை யாது?

(1) 32 (2) 25 (3) 22

13. வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும், மாறிமாறி இருக்கும் விதத்தில் ஒரு வரிசையில் தினமும் இருந்தனர். வரிசையின் முதலில் ஓர் ஆண் பிள்ளை இருப்பார். எனினும், குறித்த நாளில் சில பிள்ளைகள் வகுப்பிற்கு வருகை தராத காரணத்தால் இறுதியில் ஐந்து பெண் பிள்ளைகள் அருகருகே இருக்க வேண்டி நேர்ந்தது. வகுப்பில் உள்ள மொத்த மாணவர் தொகை 57 எனில், அன்று வருகைதந்த ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 23 (2) 24 (3) 26

- மாதிரித் தராசில் உள்ள உருக்களை அவதானித்து 14, 15 ஆகிய வினாக்களிற்கான விடையினைத் தெரிவு செய்க.




14. △ உருவம் ஒன்று எத்தனை □ உருவத்திற்கு சமனாகும்?

(1) 2 (2) 3 (3) 4

15. ○ உருவம் ஒன்று எத்தனை △ உருவத்திற்கு சமனாகும்?

(1) 2 (2) 3 (3) 4

16. 


அருகே காட்டப்பட்டுள்ள உருவில் இனங்காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை.

(1) 8 (2) 9 (3) 11

17. பச்சை நிறக் கார் மஞ்சள் நிறக் காரை விட மிகவும் வேகமாக ஓடக்கூடியது. சிவப்பு நிறக் கார் பச்சை நிறக் காரை விட மிகவும் வேகமாக ஓடக்கூடியது. கறுப்பு நிறக் கார் பச்சை நிறக் காரை விட மிகவும் வேகமாக ஓடக்கூடியதாகும். இக்கார்களில் வேகமாக ஓடக்கூடியது சிவப்பு நிறக் கார் என்பது.

(1) சரி (2) பிழை (3) கூறமுடியாது

JAFFNA EDUCATION YOUTUBE


18.  உருவில் காட்டியவாறு இலக்கங்களை மையினால் எழுதியபின் அவ் இலக்கங்களை எதிரே அச்சுப்பதிக்கும் விதமாக புள்ளிக்கோடு வழியே மடித்து விரிக்கும்போது எதிர்ப்பக்கத்தில் இலக்கங்கள் அச்சுப்பதிந்துள்ள விதத்தினைக் குறிக்கும் சரியான முறை.


(1)


(2)


(3)

19. தரப்பட்டுள்ள கோலத்தில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான விடை எது?




(1)



(2)


(3)

20. தர்மிகன் தனது நண்பனின் 10 ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்விற்கு சென்றான். அப்போது அவனது நண்பனின் தந்தை **"நாளைய தினம் தானும் தனது 10 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாட இருப்பதாகக் கூறினார்"**. இக்கூற்று தொடர்பாக கூறக்கூடியது.

(1) தந்தை கூறியது பொய் (2) தந்தை கூறியது உண்மை (3) தந்தைக்கும் 10 வயது

- **கீழே தரப்பட்ட படங்களை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.**


A B C D E

21. நாளொன்றில் மாணவன் ஒருவனின் செயல் ஒன்றை உணர்த்தும் படங்கள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடை


(1) ADECB (2) DAECB (3) DACEB

22. கமல், விமல், நிமல் ஆகிய மூன்று நண்பர்களதும் தம்பிகள் மூவரும் வரன், கரன், சரன் ஆவர். வரனுடன் கமலின் தம்பி விளையாடுகின்றார். நிமலின் தம்பி வரன் அல்ல எனின் விமலின் தம்பி யார்?

(1) வரன் (2) கரன் (3) சரன்

JAFFNA EDUCATION YOUTUBE

- கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள எழுத்துக்களைக் கவனித்து 23, 24 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.





23. சதுரம், வட்டம், முக்கோணி ஆகிய மூன்று அடைப்பினுள்ளும் முறையே உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கப்பட்ட சொல்

(1) TEN (2) SUN (3) COW

24. ஆங்கில எழுத்துக்கள் 26 இலும் மூன்று கட்டங்களிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

(1) 19 (2) 14 (3) 13

25. 

ஒரே அளவான சிறிய சதுரமுகிக் குற்றிகளால் ஆக்கப்பட்ட குறித்த பெரிய சதுரமுகியானது படத்தில் காட்டியவாறு வர்ணம் தீட்டப்பட்ட பின்னர் தனித்தனிக் குற்றிகளாக வெட்டப்பட்டது எனின், எந்தவொரு பக்கமும் வர்ணம் தீட்டப்படாமல் காணப்படும் சிறிய குற்றிகளின் எண்ணிக்கை?

(1) 14 (2) 15 (3) 16

26. 21m நீளமுடைய கயிற்றுத் துண்டிலிருந்து ஒரு பகுதி வெட்டி எடுத்த பின்னர் எஞ்சியுள்ள கயிற்றுத் துண்டானது 2 சம துண்டுகளாக வெட்டப்பட்டது. இச்சம துண்டுகளில் ஒன்றின் நீளம் 6 m எனின், முதலாவதாக வெட்டப்பட்ட கயிற்றுத் துண்டின் நீளம் எவ்வளவு?

(1) 7m (2) 9m (3) 12m

27. யூலை மாதத்தினைக் காட்டும் முறையான நாட்காட்டியில் 1 ஆம் திகதி வெள்ளிக் கிழமையாகும். அம்மாதத்தின் மூன்றாவது வாரத்தில் அமைந்துவரும் திகதிகளில் 1 என்ற இலக்கம் எழுதப்படும் தடவைகள் எத்தனை?

(1) 5 (2) 7 (3) 8

28. நிரையொன்றில் இடமிருந்து வலமாக ஐந்து மாணவர்கள் கதிரைகளில் வரிசையாக அமர்ந்துள்ளனர். இரண்டாவதாக அமர்ந்துள்ளவர் நளினி. இவளது இடது கைப் பக்கமாக இருப்பவர் சுமதி. கடைசியில் அமர்ந்துள்ளவர் நிலானி. இவள் சாந்தினிக்கு இடது கைப்பக்கம் அமர்ந்துள்ளார். நிமாலினி நளினிக்கு வலது கைப்பக்கம் அமர்ந்துள்ளார் எனின், சாந்தினிக்கு வலது கைப்பக்கம் இருப்பவர் யார்?


(1) நிலானி (2) நிமாலினி (3) சுமதி

JAFFNA EDUCATION YOUTUBE

29. நான் ஒரு ஆண் ஆவேன், முரளியின் மகன் எனது சிறிய தந்தை எனின் முரளிக்கு எனக்கும் உள்ள உறவு முறை.

(1) முரளி எனது பாட்டன் (2) முரளி எனது மாமா (3) முரளி எனது தந்தை

30. கோலத்திற்கேற்ப இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிக.




(1) 9 (2) 12 (3) 13


31. 'சமாதானம்' என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்க முடியாத சொல் எது?

(1) மானம் (2) மாதம் (3) தானம்

32. ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரமொன்றின் நிமிட முள்ளானது மு.ப 6.30 இல் இருந்து மு.ப 10.56 வரை எத்தனை தடவைகள் மணித்தியால முள்ளைச் சந்தித்துச் செல்லும்?

(1) 4 (2) 5 (3) 6

33. ஒரே அளவான சதுரமுகிக் குற்றிகளால் ஆன குறித்த உருவில் இருக்கக்கூடிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 10 (2) 19 (3) 20

34. ஒவ்வொரு பாத்தியிலும் ஒருவகை இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் செடி வகைகளும் கொடி வகைகளும் வளர்க்கப்படுகின்றன. கொடி வகைகள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை ஒன்றிலும் கூட. அதேவேளை மூன்றிலும் குறைவாகும். எனவே, செடி வகைகளும் கொடி வகைகளும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.

(1) தக்காளி, வெண்டி, பாகல், மிளகாய், புகையிலை

(2) பாகல், புடோல், பீர்க்கு, தக்காளி, வெண்டி


(3) கத்தரி, மிளகாய், வெண்டி, பாகல், புடோல்

JAFFNA EDUCATION YOUTUBE

35. முதல் ஐந்து இரட்டை எண்களும் ஐந்து அட்டைகளில் தனித்தனியாக எழுதப்பட்டுள்ளன. அதில் மூன்று அட்டைகளிலுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 16 எனின் அடுத்து இரண்டு அட்டைகளிலுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 12 (2) 16 (3) 14

36. இலக்கங்கள் பொறிக்கப்பட்ட சக்கரம் ஒன்று வலஞ்சுழியாக உருட்டப்படுகிறது. இதன்போது A என்ற இடத்தில் வரக்கூடிய இலக்கம் யாது?




(1) 12 (2) 14 (3) 16

37. ஒரு மாணவனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 300 மீற்றர் ஆகும். அவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது மொத்தத் தூரத்தில் அரைவாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்தத் தூரம் யாது?

(1) 450 மீற்றர் (2) 900 மீற்றர் (3) 600 மீற்றர்


38. நிமலாவின் வயது மாலாவின் வயதின் அரைவாசியாகும். மாலாவின் வயது துசாராவின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 42 எனின், துசாராவின் வயது என்ன?


(1) 16 வருடங்கள் (2) 28 வருடங்கள் (3) 24 வருடங்கள்


39. 609, 371, 902, 419, 854 ஆகிய எண்களை இறங்குவரிசையில் எழுதும் போது வரும் இரண்டாம் எண்ணினதும் நான்காம் எண்ணினதும் நடுவில் வரும் இலக்கங்கள் முறையே.


(1) 1, 5 (2) 7, 0 (3) 5, 1

40. தரப்பட்ட கட்டத்திற்குள்ளே உள்ள வடிவங்களை மட்டும் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட சதுரமாக அமையக்கூடியது




(1)


(2)


(3)

***

**முற்றிலும் இலவசமாக** இந்த வினாத்தளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்

TP.NO - 0741819705



# JAFFNA EDUCATION
## YouTube channel

1

## தரம் - 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப்பரீட்சை - 2022
### வினாத்தாள் II

சுட்டெண் :-...............................................

1 மணித்தியாலம் 15 நிமிடம்

ஆசிரியர் -
P.A.சசிகுமார் -B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass.Dip.in.Primary(Merid). SLEAS

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | ..............................<br>பெயர்<br>..............................<br>ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ..............................<br>பெயர்<br>..............................<br>ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர்<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ..............................<br>பெயர்<br>..............................<br>ஒப்பம் |
| பெற்றோர் | |
| ஆசிரியர் | |

1. **பின்வரும் பந்தியை வாசியுங்கள்**

வெள்ளாடொன்று ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது. தனக்கு உணவாகப் புற்களைத் தேடிப் பாறைகள் நிறைந்த மலை மீது ஏறிக்கொண்டிருந்தது. புற்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சென்ற வெள்ளாட்டுக்கு அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. வெள்ளாடு எதிர்பார்த்த மாதிரி அங்கே புற்கள் அவ்வளவாக இல்லை. ஆனால் பாறைகளின் இடுக்குகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புற்கள் தென்பட்டன. வெள்ளாடு அப்புற்களைத் தின்று தன் வயிற்றை நிரப்பிக்கொண்டது. வயிறு நிரம்பியதும் சற்று நேரம் ஓய்வெடுக்க வேண்டும் போல தோன்றியது. எனவே பாறையின் மீது படுத்து உறங்கியது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) வெள்ளாடு எதற்காகப் பாறைகள் நிறைந்த மலை மீது ஏறியது?

..........................................................................................................................

(ii) 'கிடைக்கின்றது' என்பதன் எதிர்கால வடிவம் எது?

..........................................................................................................................

(iii) அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புற்கள் எங்கே காணப்பட்டன?

..........................................................................................................................

(iv) பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள இணைமொழிச் சொல் எது ?

..........................................................................................................................

(v) வெள்ளாடு தன் வயிற்றை எவ்வாறு நிரப்பிக் கொண்டது?

..........................................................................................................................

(vi) குறுகிய காலம் என்பதைக் குறிப்பிடுவதற்குப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் யாது?

..........................................................................................................................

2. **அஃறிணை இறந்தகால பன்மை வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

(1) காத்திருந்தது (2) தென்பட்டன (3) கிடைக்கும்

3. **வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

(1) காது கேளாத மனிதன் பயன்படுத்துவது ............ஆகும். (செவிப்பண்ணி, செவிப்பன்னி)

(2) தமிழ் மொழி .................. , செம்மையும் (செழுமையும், செளுமையும்) உடைய மொழியாகும்.

4. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

(i) அமாவாசை நாளில் இருள் நிறைந்திருக்கும். (...........)

(ii) பறவைகள் பறந்த போது மின்னல் மின்னியது. (...........)

(iii) பட்டங்கள் வானத்தில் அழகாகப் பறக்கும். (..........)

(iv) மாணவன் காலையில் விழித்தெழுவார்கள். (...........)

JAFFNA EDUCATION YOUTUBE

**5. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

செவிமடுத்துக்/ பழகுங்கள்/ கூறும்/ செய்யப் /வேலைகளைச்/ கவனமாகச்

.......................................................................................................................................

**6. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

சித்திரமும் கைப்பழக்கம் ............................ நாப்பழக்கம்.

**(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

ஒருவரது தவறான வார்த்தைப் பிரயோகங்கள் அவருக்கு தீமையை ஏற்படுத்தும்.

.......................................................................................................................................

**7. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

| |
|---|
| உண்மைதான் அவர்கள் தங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்வை நினைத்துப் பார்ப்பதில்லை என்றது புலி |

**8. பின்வரும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

நேற்று டெங்கு நோய் பரவியது.

.......................................................................................................................................

**9. பெண்பால் சொல்லை எழுதுக.** புண்ணியவான் ..............................................

**10. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து எழுதுக.**

"நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை காலை ஆறு மணி முதல் பன்னிரண்டு மணிவரை நீர் வெட்டு அமுலில் இருக்கும்" பொதுமக்கள் முன்கூட்டியே நீரைச் சேமித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.


இது ஒரு ................................. ஆகும்.


( அறிவுறுத்தல் / அறிவித்தல் / விசேட அறிவித்தல் )

**11.** தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Parents ;................................ (ii) Needle ;.................................

**12. தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





.......................................... ..........................................

**13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக**

(i) a/in/We/garden/ are ;..................................................................................

(ii) book/am/I /a/reading ;................................................................................ .

14. **"நெலும் மல"  என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

.......................................................................................................................

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.**

"நான் வெளியே போகலாமா? "

.......................................................................................................................

16. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

6 809 .......................................................................................................

17.

| | | |
|---|---|---|
| 9 | | 1 |
| | 5 | |
| 13 | | 17 |

கட்டத்தில் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொது வித்தியாசம் 4 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக


1 , ..........., ..........., ............, ............

18. கடையொன்றில் 8 தேங்காய்கள் வீதம் 168 தேங்காய்க் குவியல்கள் காணப்பட்டன

(i) கடையில் இருந்த மொத்த தேங்காய்கள் எத்தனை? ..........................................

(ii) அத்தேங்காய்களை ஒன்றில் 6 வீதம் உள்ள குவியல்களாக ஆக்கினால் எத்தனை குவியல்கள் ஆக்கலாம்? .....................................

19.



இவ்வுருவின் $^3/_4$ இற்கு நிறந்தீட்டுக.

20. சுமன் கடைக்குச் சென்று ரூபாய் 12.50 வீதம் 4 பந்துகளையும் ரூபா 26.50 வீதம் 3 பொம்மைகளையும் வாங்கி கடைக்காரரிடம் ரூபாய் 100.00 தாள்கள் இரண்டைக் கொடுத்தான். அவனுக்குக் கிடைக்க வேண்டிய மீதிப்பணம் எவ்வளவு?

.......................................................................................................................


21. 24 மணித்தியாலக் கடிகாரம் 17:30 எனக் காட்டும்போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

...........................

22. நகரம் A இலிருந்து நகரம் B வரையுள்ள தூரம் 6 km 750m ஆகும். நகரம் B இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 4km 500 m ஆகும். நகரம் A இலிருந்து நகரம் B இனூடாக நகரம் C வரை உள்ள மொத்த தூரம் யாது?

............km ..........m

23.



உருவில் காட்டப்பட்டுள்ள திண்ம உருவின் பெயரை எழுதுக.

...................................................

**24.** ஒரு பாத்திரத்தில் உள்ள 2 லீற்றர் 500 மில்லிலீற்றர் பானத்தை ஒவ்வொன்றும் 350 மில்லி லீற்றர் அளவான 3 குவளைகளில் ஊற்றும் போது எஞ்சியிருக்கும் பானத்தின் அளவு யாது?

……………..லீற்றர் …………மில்லிலீற்றர்

**25.** ஒரு பையில் 6kg450g பருப்பு இருந்தது. அதற்குள் மேலும் 2kg750g பருப்பு இடப்படுகின்றது. இப்போது பையில் உள்ள பருப்பின் மொத்த நிறை யாது?

…………………..kg……………….g

**26.** சிட்டையை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக

| பொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| மா | 1 kg 500g | 540 | 00 |
| அரிசி | 2 kg | 560 | 00 |
| பருப்பு | 250g | 95 | 50 |

(i) 500g மா வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? ……………………………ரூபாய்

(ii) 500g பருப்பும் 1 kg அரிசியும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

……………………………………………ரூபாய்


**27.** 18 புத்தகங்களில் $\frac{4}{6}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

…………………………………

**28.** 16 என்ற எண்ணிற்கு அடுத்து வரும் எண்ணை உரோமன் எண்ணில் எழுதுக.

……………………………………….

**29.** பாடசாலை ஒன்றின் தரம் 05 வகுப்பில் ஐந்து நாட்கள் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) வெள்ளிக்கிழமை வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையானது புதன்கிழமை வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையிலும் இரு மடங்கு அதிகம் எனின், புதன்கிழமை வருகை தந்த மாணவர்களை வரைபில் குறித்துக் காட்டுக.

(ii) திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களும் வருகை தந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

………………………………

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'இலவசக் கல்வியின் தந்தை' என அழைக்கப்படுபவர்.

(1) கலாநிதி. ரீ.பி.ஜாயா
(2) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி
(3) கலாநிதி. சி. டபிள்யு டபிள்யு கன்னங்கரா

31 பின்வருவனவற்றுள் **தொற்றாத** நோயாக இருப்பது எது?

(1) குருதிச்சோகை (2) வாந்திபேதி (3) கொரோனா

32 கால்கள் அற்ற பிராணிகள் மாத்திரம் இடம் பெறும் விடை எது?

(1) மண்புழு, ஆமை, கபரக்கொய்யா
(2) பல்லி, மண்புழு, கறையான்
(3) நத்தை, மண்புழு, பாம்பு

33. செண்பகத்தினால் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மையாக அமைவது.


(1) ஒலியை எழுப்பாது (2) பகலில் நடமாடுதல் (3) நத்தைகளை உண்ணும்

34. வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் துளசிச் செடியைப் பயிரிடுவதன் முக்கிய நோக்கம்.

(1) அழகிற்காக
(2) தீமை செய்யும் பூச்சிகளை விரட்டுவதற்கு
(3) இடைவெளிகளை நிரப்புவதற்கு

35. தாவர உண்ணிகள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?

(1) மான்,முயல்,ஆடு,தும்பி
(2) குதிரை,ஒட்டகம்,எருமை,உடும்பு
(3) மரை,யானை,தேனீ,மயிர்க்கொட்டி

36.

உருவில் உள்ள தையல் முறை எதற்கு உகந்தது?

(1) பூ அலங்காரம் தைப்பதற்கு
(2) கிழிந்த உடையைத் தைப்பதற்கு
(3) தெறியோட்டையைத் தைப்பதற்கு

37. வெப்பத்தை மட்டும் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவு வகை எது?

(1) இடியப்பம் (2) பாண் (3) இட்லி

38. வீதிச் சமிக்ஞை விளக்குகளில் பச்சை நிற மின்குமிழ் ஒளிரும் போது கருதப்படுவது.

(1) நிறுத்துக (2) பயணிக்குக (3) பயணிப்பதற்கு ஆயத்தமாகுக


39. "தவில்" எனும் சங்கீத உபகரணம் இசைக்கப்படுவது

(1) இரண்டு கைகளாலும் (2) கையாலும் தடியாலும் (3) தடிகளால் மாத்திரம்

40. கொரோனா தொற்றுக்கு ஆளாகக் கூடிய சந்தர்ப்பமாக அமைவது எது?


(1) ஏனையவர்களுடன் கைகுலுக்கிக் கொள்ளுதல்
(2) கைகளை அடிக்கடி கழுவிக் கொள்ளுதல்
(3) சமூக இடைவெளியைப் பேணுதல்

41. இந்த உபகரணத்தின் பயன்பாடு அல்லாதது எது?




(1) திருகாணியை கழற்றுதல்
(2) மீன்ரின் மூடியைத் திறத்தல்
(3) போத்தலின் தக்கையை கழற்றுதல்

42. பாக்கை இலகுவில் வெட்டுவதற்கு பாக்கு வெட்டியில் பாக்கை வைக்க வேண்டிய சரியான இடத்தைக் காட்டும் உரு எது?


(1)


(2).


(3).

JAFFNA EDUCATION YOUTUBE

43. 100 m ஓட்டப் போட்டியின் போது வெற்றி பெற்றவர்களைத் தெரிவு செய்வதற்காக காலம் கணிக்கப்படுவது

(1) விநாடிகளில் (2) நிமிடத்தில் (3) மணித்தியாலத்தில்

44. நாம் நடந்து செல்லும் போது முதலில் நிலத்தில் படவேண்டிய காலின் பகுதி எது?


(1) விரல்கள் (2) பாதம் (3) குதிக்கால்

45. குளிரூட்டியைப் பயன்படுத்தி பாதுகாக்கும் சந்தர்ப்பம் அல்லாதது.

(1) மீனைப் பழுதடையாமல் வைத்திருத்தல்.
(2) பழவகைகளை நல்ல நிலையில் பாதுகாத்தல்.
(3) குளிர்பானங்களை பழுதடையாமல் பாதுகாத்தல்.

46. பருப்பு, சோறு, பப்பாசிப்பழம் ஆகிய ஒவ்வொன்றிலும் அதிகம் அடங்கியுள்ள போசணைகளை முறையே காட்டும் விடை எது?

(1) விற்றமின், காபோவைதரேற்று, புரதம்
(2) புரதம், காபோவைதரேற்று, விற்றமின்
(3) புரதம், கல்சியம், விற்றமின்

47. 

சூரிய ஒளி நன்றாக விழும் இடத்தில் ஒரு மரத்தின் கிளையானது பரிசோதனைக்காக பொலித்தீன் பையினால் மூடிக்கட்டப்பட்டு இரு மணித்தியாலத்தின் பின் அவதானித்தபோது

(1) இலைகள் வாடி இருக்கும்
(2) பையினுள் சிறிய நீர்த்துளிகள் படிந்திருக்கும்
(3) பையின் வெளியே நீர்த்துளி படிந்திருக்கும்

48. மரக்கறி வகைகளில் **கரட்** ஆனது இனப்பெருக்கம் செய்யும் முறை

(1) தண்டின் மூலம் (2) வித்தின் மூலம் (3) வேரின் மூலம்

49. தேசப்படத்தில் சிறு வீதியைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்.

(1) மஞ்சள் (2) கறுப்பு (3) சிவப்பு

50. தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம் எது?

(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) செய்தித்தாள்

51. காந்தத்தினால் கவரப்படும் பொருட்கள் மாத்திரம் அடங்கிய விடையாக அமைவது எது?

(1) சவர அலகு, பித்தளை ஆணி, குண்டூசி
(2) இரும்பாணி, குண்டூசி, செப்பு நாணயம்
(3) குண்டூசி, சவர அலகு, இரும்பாணி

52. வாகன இலக்கத்தகடுகளில் ஆரம்பத்தில் காட்டப்படும் இரு ஆங்கில எழுத்துக்களும் குறிப்பது

(1) வாகன உரிமையாளர் வசிக்கும் மாவட்டம்
(2) வாகனத்தை உற்பத்தி செய்த நாடு
(3) வாகன உரிமையாளர் பதிவு செய்த மாகாணம்


53. தேசிப்புளியைக் கரைப்பதற்கு பொருத்தமற்ற பாத்திரம் எது?

(1) பிளாஸ்ரிக் பாத்திரம் (2) அலுமினியப் பாத்திரம் (3) கண்ணாடிப் பாத்திரம்

JAFFNA EDUCATION YOUTUBE

54. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கினையும் பறவையையும் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) கருங்குரங்கும் காட்டுக் கோழியும்
(2) கொம்பு ஓணானும் சபன் கோழியும்
(3) வெட்டியானும் காட்டுக் கோழியும்

55. 

படத்தில் காட்டப்பட்டவாறு நீரை வெப்பமேற்றும்போது A என்ற எழுத்துக் குறிப்பது

1) நீராவி
2) பனிக்கட்டி
3) நீர்த்துளி

56. பறவை இனங்களில் கிளிக்கு உள்ள விசேட திறனாக அமைவது எது?

(1) மரமொன்றைத் துளையிடல்
(2) நுட்பமாக கூடு கட்டல்
(3) சிலவற்றை வெட்டுதல்


57. "பச்சை வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ….." என்று தொடங்கும் இப்பாடல்

(1) மீனவர் பாடல் (2) உழவர் பாடல் (3) அரிவு வெட்டுப் பாடல்

58. ஏதேனும் ஆபத்தொன்று நேர்ந்த சந்தர்ப்பங்களில் முதலுதவி வழங்கும் நிறுவனம் எது?

(1) யுனிசெவ் நிறுவனம் (2) செஞ்சிலுவை சங்கம் (3) சர்வோதயம்

59. கீழே காட்டப்பட்ட எந்தச் சுற்றுக்களில் மின் குமிழ் ஒளிரும்?



(1) (2) (3)

**60. "எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வழி முறைகள்"** எனும் தலைப்பின் கீழ் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

****

**முற்றிலும் இலவசமாக** இந்த வினாத்தாளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்